பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 04 2024 7 15

<u>திங்கட்கிழமை</u> காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப்பெறுவதற்கான காலக்கெடு இன்றுடன் முடிவடைகிறது.

2. விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் என பல்வேறு தரப்பினருக்கு ஏற்ற வகையில் நலத்திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தி வருவதாக பிஜேபி தலைவர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

3. எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை மத்திய அரசு முடக்க முயற்சிப்பதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. பிரகாஷ் காரத் குற்றம் சாட்டியுள்ளார்.

4. சத்தீஸ்கர் மாநிலத்தில் அடர்ந்த வனப்பகுதியில் செயல்பட்டு வந்த நக்சல் தீவிரவாதிகளின் முகாமை பாதுகாப்புப் படையினர் அழித்ததோடு ஏராளமான வெடிமருந்துகளையும் கண்டெடுத்தனர்.

5. ஸ்பெயினில் உள்ள மாண்டிகார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் சுமித் நாகல் முன்னேறி உள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப்பெறுவதற்கான காலக்கெடு இன்றுடன் முடிவடைகிறது.

மக்களவைக்கு 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 தொகுதிகளுக்கு இம்மாதம் 26ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

கேரளாவில் 20, கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களில் தலா 8, மத்தியப்பிரதேசத்தில் 5, அசாம், பீகார் மாநிலங்களில் தலா 5, மேற்குவங்கம், சத்தீஸ்கர் மாநிலங்களில் தலா 3, மணிப்பூர். திரிபுரா, ஜம்மு-கஷ்மீரில் தலா ஒரு தொகுதியிலும் வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.

காலக்கெடு முடிவடைந்த பின்னர் இன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியாகும்.

இதற்கிடையே முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும், அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம் மாநிலங்களில் தலா ஒரு தொகுதியிலும், அந்தமான் நிகோபார், லட்சத்தீவு யூனியன் பிரதேசங்களில் தலா ஒரு தொகுதியிலும்...

... வாக்குப்பதிவுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்தத் தொகுதிகளில் முகாமிட்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூரில் நேற்று திறந்த வாகனத்தில் சென்று வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

அவருடன் மாநில முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் உள்ளிட்ட பிஜேபியின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதற்கிடையே தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிஜேபி தலைவர் திரு. ஜேபி. நட்டா, தமிழகத்தில் நேற்று திருச்சி, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்தார்.

திருச்சியில் நேற்று மாலை திறந்த வாகனத்தில் சென்று வாக்காளர்களிடையே அவர் ஆதரவு திரட்டினார்.

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நேற்றிரவு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவுக்கான உற்பத்தி இயக்கத்தின் சார்பில் உள்நாட்டிலேயே ஏராளமான பொருட்கள் உற்பத்தி...

... செய்யப்படுவதாகவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி கணிசமாக தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் என பல்வேறு தரப்பினருக்கு ஏற்ற வகையில் நலத்திட்டங்களை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. பிரகாஷ் காரத், எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை மத்திய அரசு முடக்க முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.

ஆதாரங்கள் இல்லாமல் தில்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மியின் ஒருங்கிணைப்பாளருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் ஆகியோரை அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் பத்திரங்கள் மூலமாக பிஜேபி தனியார் நிறுவனத்திடமிருந்து ஏராளமாள நிதியுதவியை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ரஷ்யாவில் இந்திய கடற்படைக்காக கட்டப்பட்டு வரும் 2 போர்க் கப்பல்கள் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

யுக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் காரணமாக இந்த கப்பல் கட்டும் பணி தாமதமாகியுள்ளது.

ஐ.என்.எஸ். துஷில், **INS Tamal** ஆகிய 2 போர்க்கப்பல்கள் ரஷ்யாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் கோவா கப்பல் கட்டும் தளத்தின் உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது.

அந்த பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக கடற்படையின் உயரதிகாரிகள் ரஷ்யா சென்று ஆய்வு செய்துள்ளனர்.

இந்த 2 போர்க் கப்பல்களும் விரைவாக கட்டி முடிக்கப்பட்டு இந்த ஆண்டு ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் வெள்ளோட்டம் விடப்பட உள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

<<<<>>>>

முப்படையினருக்கான **'Parivarthan Chinthan'** ஒருநாள் மாநாடு, தலைமை தளபதி ஜென்ரல் அனில் சௌகான் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

முப்படைகளின் தளபதிகள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில், பல்வேறு சூழ்நிலைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவது, செயல்பாடுகளில் சீர்திருத்தங்களை கொண்டுவருவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் எந்தவொரு சூழ்நிலையையும் ராணுவ ரீதியில் எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் அடர்ந்த வனப்பகுதியில் செயல்பட்டு வந்த நக்சல் தீவிரவாதிகளின் முகாமை பாதுகாப்புப் படையினர் அழித்ததோடு ஏராளமான வெடிமருந்துகளையும் கண்டெடுத்தனர்.

மத்திய ரிசர்வ் காவல் படையினரும் அந்தப் படையின் கோப்ரா படைப்பிரிவினரும் **Tondamarka, Dabbamarka** கிராமங்களை ஒட்டிய அடர்ந்த வனப்பகுதியில் நேற்று திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது நக்சல் தீவிரவாத முகாம் செயல்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து அந்த முகாமை அழித்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து 350 ஜெலட்டின் குச்சிகள், 105 எலக்ட்ரிக் டெட்டனேட்டர்கள், எறி குண்டுகளை ஏவும் சாதனம் மற்றும் 5 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளையும், சில ஆவணங்களையும் பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில் மகராஷ்டிரா மாநிலம் கட்ச்ரோலி மாவட்டத்தில் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த 2 பெண் நக்சல் தீவிரவாதிகளை காவல்துறையினர் நேற்று கைது செய்தனர்.

இவர்கள் குறித்த தகவல் அளித்தால் ஐந்தரை லட்சம் ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என்று ஏற்கனவே காவல்துறை அறிவித்திருந்தது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்காக உருவாக்கப்பட்ட பெண்களைக் கொண்ட சிறப்பு படை வரும் மக்களவைத் தேர்தலில் முக்கியமான பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

8 பேர் கொண்ட ஒவ்வொரு பிரிவுக்கும் தானியங்கி துப்பாக்கிகள், குண்டு துளைக்காத உடைகள் மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் படைப் பிரிவினருக்கு கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்நிலையில் ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மக்களவைத் தேர்தலை அமைதியாக நடத்தி முடிக்க இந்தப் படையினர் பயன்படுத்தப்பட உள்ளனர்.

இதற்கிடையே ஜம்மு-கஷ்மீர் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. **Pole** நேற்று கந்தர்வால் பகுதிக்குச் சென்று அங்கு செய்யப்பட்டுள்ள தேர்தல் ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்.

<<<<>>>>

ஸ்பெயினில் உள்ள மாண்டிகார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் சுமித் நாகல் முன்னேறி உள்ளார்.

நேற்று நடைபெற்ற கடைசி தகுதிச் சுற்றுப் போட்டியில் அவர், 7-5, 2-6, 6-2 என்ற செட் கணக்கில் அர்ஜெண்டினாவின் டையஸ் அக்கோஸ்டாவை வென்றார்.

கடந்த 42 ஆண்டுகளில் இந்தியர் ஒருவர் இப்போட்டியின் பிரதான சுற்றுக்கு முன்னேறுவது இதுவே முதல் முறையாகும்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 33 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 163 ரன் எடுத்தது.

164 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 18 புள்ளி 5 ஓவரில் 130 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

யாஷ் தாக்கூர் அற்புதமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முன்னதாக மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 29 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி – பெங்களுரு அணியை வீழ்த்தியது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி 2-1 என்ற கோல் கணக்கில் பெங்களுரு அணியை வென்றது.

<<<<>>>>

பெர்த்தில் நடைபெற்ற ஆடவர் ஹாக்கி தொடரின் இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலியா 4-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>

தெற்கு காஸா திட்டுப் பகுதியில் இருந்து ராணுவ வீரர்களை இஸ்ரேல் விலக்கிக்கொண்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் தேதி தாக்குதல் தொடுத்த பின்னர் காஸா பகுதி மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை மேற்கொண்டது.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் தனது ராணுவ வீரர்களை விலக்கிக்கொள்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே போர்நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று ஏராளமான நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

பாலஸ்தீன தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இஸ்ரேல் ஒருபடி முன்னேறியுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்

ஹமாஸ் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்காதவரை போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் தயார் என்றும் ஆனால் சரணடைய அல்ல என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் வட மற்றும் உள் மாவட்டங்களில் வெப்பநிலை 5 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று வெப்பநிலை 39 டிகிரி செல்சியசாக இருக்கக்கூடும் என்றும், கடலோர மாவட்டங்களில் அனல் காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் கோவை மாவட்டத்தின் சில இடங்களில் நேற்று லேசான மழை பெய்தது.

இருப்பினும் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவியது.

**<<<<The End>>>>**